(ரூபாய் ஆயிரத்தில்)

வ. எண்.	கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	*6,68,00*	--	
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	*22,82,00*	-	-
	பெருமொத்தம்	**2,168,41,52**	**579,74,11**	**750,22,43**

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி என்ற முறையில்* Zero Hours*—ல் சில பிரச்சினைகளை நாங்கள் கொண்டு வருகிறபோது நன்றி சொல்வதற்கு மட்டும் நீங்கள் அனுமதித்து, எதிர்க்கட்சியை நசுக்குகின்ற வேலையிலே நீங்கள் ஈடுபடுகின்ற காரணத்தால் உங்களைக் கண்டித்து இந்தச் சபையிலிருந்து நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.*

(உறுப்பினர்கள் திரு. க. இராஜேந்திரன் மற்றும் திரு. ல. ராதாகிருஷ்ணன் தவிர அ.இ.அ.தி.மு.க. மற்றும் ம.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2010-2011, மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 8—11—2010 ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, 2010—2011 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் ஒவ்வொரு மானியக் கோரிக்கையின்மீதும் தலா 5 வெட்டுத் தீர்மானங்களுக்கு மிகாமல் இன்று (9—11—2010) பிற்பகல் 3—00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*